ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 7 ஏப்ரல் & மே, 1944 நெ. 1 & 2

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம்.எல்.ஏ.

அஸ். சத்தியநாராயணா.

எடிடர்.

ஸ்ரீமான்

வி. விய்யன்னா, பி.ஏ., பி.எல்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.

1. தலையங்கம்—

*நம் பத்திரிகை* ... 99

*சென்னை கவர்மெண்டாரும், நிர்மாண திட்டங்களும்* ... 100

*கிராம ரஸ்தாக்களைப்பற்றி என்ன ?* ... 101

2. கால்நடைகளின் அபிவிருத்தி ... 103

3. வர்த்தமானங்களும், குறிப்புகளும் ... 104

4. சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் சங்கம்—
1943-44 வருஷத்திய யாதாஸ்து ... 106




கிராம பஞ்சாயத்து போர்டின்
கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# The Village Panchayat Journal.

VOL. VII] APRIL & MAY, 1944 [No. 1 & 2

*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

## Ourselves.

With this number we enter on the seventh year of existence. Practically during the whole of this period, with the exception of the first, the global war, as the present war has come to be known, has been on us. That we have had, during these times of stress, sufficient patronage extended to us to carry on as best as possible is a sign that the Panchayat movement has an eternal interest and it shall, at no distant date, assert itself. We thank our numerous friends who have always been of good help to us in our endeavour. We would desire, however, to request them to think of doing a little more for us. Every Panchayat that is now a subscriber can easily influence just another Panchayat not now our member to become one. That way lies the line of progress for the cause. Unless effort is put in, even in times like this, we shall not be in a position, after the war, to take up seriously those big schemes held aloft before us for the reconstruction of our land. Nothing can help that reconstruction so well as an all embracing net work of village organisations like the Panchayat and the Co-operative Society. So we would urge our well-wishers to complete in time the universal spread of Panchayats. As a first step in that direction, a voice like ours which ever proclaims the necessity for it should be strengthened and strengthened without delay. We hope that during this seventh year of our career, we shall have the unstinted support of all Panchayats in the province and of all Panchayat workers and shall be able to do more and more service to the cause.

## The Madras Government and Post-war Reconstruction.

Mr. T. Austin, Adviser to the Governor of Madras, did well to explain what the Madras Government contemplated to do for post-war reconstruction. He touched two main issues—Education and Health. His anxiety to achieve literate electorates is quite a welcome sign that the Madras Government is not unmindful of the fundamental need of democracy. Mr. Austin, however, did not tell

us how his Government proposed to achieve literacy for the electorate. What little attempt the non-officials have been making in this Province to spread literacy has been greatly impeded by a G.O. of 1942 that is still in force. May we ask in all sincerity that Mr. Austin do immediately cancel that G. O. so that free scope may exist for the spread of literacy which he so prizes in a voter. We are thankful to the adviser for envisaging starting of the VIth standard in Elementary Schools universally after the war. Side by side, may we point out that the agency to manage elementary schools should be the Panchayat. While experts look after the technical side of schools, their ordinary management is best done by the people's representatives on the spot; for, it is they alone that can have knowledge of the day-to-day conduct of the school. That Mr. Austin has stressed the need that there will be for the reorientation of the school curriculum to suit the expanding needs of a new technical age is all correct. We hope we shall be soon working at basic education in this province. In matters of Health and Sanitation what Mr. Austin said is very helpful and hopeful. Unlike many others, he has not forgotten the Indian Medical man and his science. A dispensary within a radius of two or three-miles and a hospital within a radius of 5–6 miles if achieved would be really a revolution in medical aid. We would suggest that the present Government may take up four taluks in four quarters of the Province immediately and work out this scheme as a preliminary to the larger schemes so that the experience gained may be applied to the whole Province. On the side of sanitation also such an experiment may be tried on the lines suggested by the adviser—namely, providing protected water-supply for every village and keeping the village sites uncontaminated. While we congratulate the adviser on the practical measures his Government contemplate to provide protected water-supply and drainage to all municipalities and panchayats with 10,000 or higher population, we would earnestly press on his attention the need there is to take some such steps as we have suggested in the other matters that the adviser has referred to in his very sympathetic speech.

---

## What about Village Roads ?

"Good, cheap and ample communications are vital to the agricultural, industrial, commercial and cultural development of India. The programme envisaged is an ambitious one but that need not frighten us. We propose to go on with our examination undeterred by fears of finance and other difficulties."

So said recently Sir Muhammad Usman, Government of India member for posts and air. We believe that this pronouncement from such a high dignitary is a sign of the times and we hope that in regard to communications a much more liberal policy will be followed than has so far obtained. This gains strength from consideration of certain actualities that must be faced after the war. The demobilised army personnel, which will be very huge in number, will have to be found employment. A very small percentage of it may be technically employed. A little more than that may go into agriculture; but, without further improvements for agricultural purposes and substantial investment, absorption into agriculture of this population will not be easy. The readiest employment to hand that the

Government may find for these men, after the war, is improvement of communications in the country. Machinery and material for this purpose will be available in plenty also left over from the war. So this brave pronouncement from Sir Usman is probably not to be discounted. But, as our readers know, we are concerned more with the roads that come within the jurisdiction of local bodies, more particularly Panchayats. We desire to draw attention to the fact that the position in regard to these roads after the war began has grown worse.

Heretofore the district board was granting a fourth of the cost of roads made by the Panchayat. The Government gave half grants. So, the share of the Panchayat came but to a fourth. With the vicissitudes of compensation for toll income the district boards do not now disburse grants for roads to Panchayats. The Government sticks to its half-grant. In days when prices for material and labor have soared high the scheduled rates sanctioned have been enhanced by 50 per cent. To take item by item labor has gone up in rates 150 per cent to 200 per cent. Cart hire to-day is three times what it was before the war. The price levels for draught bullocks have touched a minimum of 300 per cent. Other material required for road laying like cement pipes and the like is well-nigh unavailable. Cement in fact does not show its head at the controlled rates but hides fully shrouded in black markets. Under such conditions, for Panchayats to think of laying roads is to think of impracticabilities. It is necessary that the Government should come to the rescue. The scheduled rates should be much further raised to make laying of roads a practical proposition. The Government should make up their minds to assist the Panchayats in a more substantial manner. They will do well to fix the contribution of the Panchayat at just a fourth of the cost as it really was at one time. When Panchayats started work under the Panchayat Act XV of 1920, next to schools, the greatest achievement of the Panchayats was Roads. The Registrars-General of Panchayats in those days encouraged the Panchayats by munificent grants and many a Panchayat enthusiastically took up road works. If village communication should be anywhere near the mark when reconstruction begins after the war and big schemes come into operation, as they must, the policy of Government should change even from to-day. They may begin now and here and make it easy for Panchayats to take up improvement of communications within their limits. In addition to bettering conditions in regard to grants and rates, the processes in regard to estimating and sanctioning of estimates have to be still further simplified. Panchayats should be allowed to group themselves together and employ their own technical staff including overseers to draw up estimates. This is a reform very long overdue and the Local Government should no more permit the old state of affairs to continue.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

| Vol. 7 | ஏப்ரல் & மே, 1944 | No. 1 & 2 |
|---|---|---|

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப் தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற் செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

---

## தலையங்கம்.

### நம் பத்திரிகை.

இந்த இதழுடன் எமது ஏழாவது ஆண்டு ஆரம்பமாகிறது. முதல் வருஷத்தை தவிர, அநேகமாக மற்ற ஆண்டுகள் எல்லாம் உலக மகா யுத்த காலமாக இருந்திருக்கிறது. இந்த கஷ்டமான காலங்களிலும் நமக்கு சேவை செய்ய போதுமான ஆதரவு கிடைத்து இப்பத்திரிகை நடத்துவது சாத்தியமாயிருந்தது என்பது பஞ்சாயத்து இயக்கத்தின் அழியாத் தன்மையையும், ஜனங்களுக்கு அதனிடமிருக்கும் பற்றுதலையும் தெளிவுபடுத்தி இவ்வியக்கம் கூடிய சீக்கிரம் இன்னும் வலுவடையும் என்பதை காட்டுகிறது. நமக்கு உதவி செய்த பல நண்பர்கள் யாவருக்கும் நாம் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஆயினும், இன்னும் கொஞ்சம் அதிக உதவி செய்யும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். நமது சந்தாதாரராக இருக்கும் ஒவ்வொரு பஞ்சாயத்தும் மற்ற பஞ்சாயத்துகளை எமது சந்தாதாரராக சேர்க்கலாம். இந்த சமயத்திலும் நாம் முயற்சி செய்து உழைத்தாலொழிய, யுத்தத்திற்குப்பின் நடத்தப்போவதாகச் சொல்லும் நிர்மாண வேலைகளில் நாம் சரிவர பங்கெடுத்துக் கொள்ளமுடியாது. ஒவ்வொரு கிராமத்திலும் சரிவர வேலைசெய்யும் பஞ்சாயத்து, கோவாபரேடிவ் ஸ்தாபனம் செய்யக்கூடிய சேவையைப்போல் அந்த புனருத்தாரண வேலைக்கு வேறொரு ஸ்தாபனத்தினாலும் செய்யமுடியாது. ஆகையால் துரிதமாக பஞ்சாயத்துகளை எல்லா இடங்களிலும் ஸ்தாபிக்கும்படி நண்பர்

களை வற்புறுத்துகிறோம். அதற்கு முதல் படியாக அவைகளுக்காக பாடுபடும் இப்பத்திரிகையை தாமதமன்னியில் பலப்படுத்தவேண்டும். இந்த ஏழாவது ஆண்டிலும் எமக்கு எல்லா பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து ஊழியர்கள், இவர்களுடைய பூரண ஆதரவு பெற்று அந்த இயக்கத்திற்கு மேலும் மேலும் அதிக சேவை புரிய ஆதரவு கிடைக்குமென்று நம்புகிறோம்.

---

## சென்னை கவர்மெண்டாரும், நிர்மாண திட்டங்களும்.

சென்னை கவர்னரின் ஆலோசனையாளரான கனம் ஆஸ்டின் துரையவர்கள் யுத்தத்திற்குப்பின் சென்னை கவர்மெண்டார் செய்யப்போகும் நிர்மாண திட்டங்களைப்பற்றி விவரித்திருப்பது பொருத்தமானதே. அவர் கல்வி, ஆரோக்யம், ஆகிய இந்த இரண்டு முக்கியமான விஷயங்களைப்பற்றி பிரஸ்தாபித்தார். ஜனநாயகத்திற்கு இன்றியமையாததான, கல்வியறிவுள்ள வாக்காளர்கள் ஏற்படுவதின் அவசியத்தை கவர்மெண்டார் உணர்ந்திருப்பது ஒரு நல்ல சகுனமே. உத்தியோகப் பற்றற்றவர்கள் கூடுமானவரையில் இது விஷயமாக செய்துவந்த முயற்சிகள் கவர்மெண்டார் 1942இல் பிறப்பித்த ஒரு உத்தரவினால் தடைபட்டு வந்தது. இந்த உத்தரவை வாபஸ் செய்யும்படி ஆஸ்டின் துரையை மிகவும் வணக்கமாக தெரிவித்துக் கொள்ளுகிறோம். யுத்தத்திற்குப் பின் எல்லா பள்ளிக்கூடங்களிலும் ஆறாவது வகுப்பு ஏற்படுத்தப் போவதாக தெரிவித்திருப்பதுபற்றி வந்தனம்.

இந்த சந்தர்ப்பத்தில் இந்த ஆரம்பப் பள்ளிக்கூடங்களை பஞ்சாயத்துகளின் நிர்வாகத்தின்கீழ் ஒப்படைக்கும்படி 'கேட்டுக்கொள்ளுகிறோம். கல்வி சம்பந்தமான பிரத்யேக விஷயங்களை அதில் தேர்ந்தவர்கள் கவனிக்க வேண்டியது அவசியமானாலும், பள்ளிக்கூடத்தின் நிர்வாகத்தை அந்தந்த ஸ்தலத்திலுள்ள ஸ்தாபனத்தினிடம் ஒப்பிவிப்பதுதான் நல்லது. பள்ளிக்கூட பாடங்களில் இப்போது ஏற்பட்டுவரும் புது மாறுதல்களுக்கேற்ப தொழில் சம்பந்தமாக திருத்தியமைக்க உத்தேசித்திருப்பது உசிதமானதுதான். 'பேசிக்' கல்வி போதனமுறை கூடிய சீக்கிரம் இம்மாகாணத்திலும் அமுலுக்குக் கொண்டு வரப்படும் என நம்புகிறோம். ஆரோக்கியத்தைப்பற்றியும், சுகாதாரத்தைப்பற்றியும் அவர் சில உபயோகமான விஷயங்களைப்பற்றி பிரஸ்தாபித்தார். அவர், வேறு சிலரைப்போல் இந்திய வைத்தியனை மறக்கவில்லை. இரண்டு மூன்று மைல் எல்லைக்குள் ஒரு மருந்து சாலையும், 5, 6 மைலுக்கு ஒரு ஆஸ்பத்திரியும் ஏற்படுமானால், அதனால் ஏற்படும் நன்மைகளை சொல்லிமுடியாது. பூர்வாங்கமாக, மாகாணத்தின் நான்கு பாகங்களில் நான்கு தாலூக்காக்களை பொறுக்கி, அவைகளில் முதல் முதல் இந்த முறைகளை பரிக்ஷித்துப் பார்த்து பின்னிட்டு அந்த அனுபவம் கொண்டு இதர இடங்களுக்கு பரவும்படி செய்யலாம் என்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். சுகாதார விஷயமாகவும் அவர் சொன்னபடி ஒவ்

வொரு கிராமத்திற்கும் மூடின ஜல சப்ளை திட்டமும், பொது ஸ்தலங்களை அசிங்கம் செய்யாமல் பாதுகாப்பதும் செய்து பார்க்கலாம். 10,000 ஜனத்தொகைக்கு அதிகமாகக் கொண்ட எல்லா பஞ்சாயத்துகளிலும், முனிசிபாலிடிகளிலும் மூடப்பட்ட ஜல சப்ளையும், சாக்கடை வசதிகளும் செய்து கொடுக்க தீர்மானித்திருப்பதற்காக நாம் அவரை பாராட்டுகிறோம். அன்றியும் அவர் தன்னுடைய அனுதாபம் நிறைந்த பிரசங்கத்தில் குறிப்பிட்டுள்ள இதர விஷயங்களை நிறைவேற்றவும் தக்க முயற்சிகள் செய்யவேண்டும் என்று மிகவும் வற்புறுத்துகிறோம்.

---

## கிராம ரஸ்தாக்களைப்பற்றி என்ன?

"இந்தியாவின் விவசாய, தொழில், வியாபார, கலை, முன்னேற்றங்களுக்கு, மேன்மையானதும், அதிக செலவில்லாததும், தாராளமானதுமான போக்கு வரத்து சாதனங்கள் அத்யாவசியம். நாம் போட்டிருக்கும் திட்டமானது பிரம்மாண்டமானது. ஆனால் அதை நிறைவேற்றுவதில், பணக் கஷ்டத்தினாலாவது, இதர இடையூர்களினாலாவது நாம் அஞ்சப் போவதில்லை" என்று இந்தியா கவர்மெண்டு மெம்பர் கனம் ஊஸ்மான் அவர்கள் சொன்னார். இதனால் இத்தனை காலம் இருந்ததைவிட இனி நமது இந்தியா கவர்மெண்டார் போக்கு வரத்து சாதனங்கள் விஷயத்தில் இன்னும் தாராளமாக நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். யுத்தத்திற்குப் பின் ஏற்படக்கூடிய சில சந்தர்ப்பங்களிலிருந்தும் இந்த நம்பிக்கை நமக்கு வலுக்கிறது. சண்டையிலிருந்து திரும்பி வரும் ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலை தேடிக் கொடுக்கவேண்டும். அவர்களில் கொஞ்சம் பேர்கள் மட்டும் தொழில் வேலைகள் கற்றவர்களாக இருப்பார்கள். அதைவிட இன்னும் கொஞ்சம் அதிகம் பேர் விவசாயத்தை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் விவசாயத்தில் இத்தனை பேர்களுக்கும் பிழைப்பு நடக்க வேண்டுமானால் விவசாய முறைகளில் பல அபிவிருத்திகள் செய்தாக வேண்டும். ஆகையால் இத்தனை பேருக்கு சுலபமாக வேலை கொடுக்கக்கூடியது போக்கு வரத்து சாதனங்களை சீர்படுத்துவதுதான். யுத்தத்திற்குப் பின், யுத்தத்தில் உபயோகப்பட்டு வந்த கருவிகளும் சாமான்களும் ஏராளமாக கிடைக்கும், ஆகையால் கனம் மெம்பர் இவ்வளவு தைரியமாக பேசியதற்கு இடமிருக்கிறது. ஆனால், நம் வாசகர்கள் ஊகிக்கக்கூடியதுபோல், நாம் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு—அதுவும் பஞ்சாயத்துகளுக்கு—அடியில் வரப்போகும் சாலைகளைப்பற்றிதான் அக்கரை கொண்டுள்ளோம். யுத்தத்திற்கு பின் இந்த சாலைகளின் நிலைமை மிக்க மோசமாகிவிட்டது என்பதை குறிப்பிட விரும்புகிறோம்.

இதுவரையில் பஞ்சாயத்து போட்ட ரோட்டுகளுக்குண்டான செலவில் ஜில்லா போர்டு கால் பாகம் கொடுத்து வந்தது. பாதி திரவிய சகாயம் கவர்மெண்டு கொடுத்தது. பஞ்சாயத்தின் பங்கு கால் பாகம்தான். சங்க

வரிக்கு ஈடாக ஜில்லா போர்டுகளுக்கு கொடுத்துவந்த தொகை பலவிதமாக சுருங்கப்பட்டு வந்ததால், ஜில்லா போர்டுகள் இப்போது சாலைகள் போடுவதற்கு பஞ்சாயத்துகளுக்கு ஒரு உதவியும் செய்வதில்லை. கவர்மெண்டு அது கொடுத்தவந்த மாமூல் பாதி திரவிய சகாயமே கொடுத்து வருகிறது. எல்லா சாமான்களின் விலையும் அபரிமிதமாக ஏறியிருக்கும் இக்காலத்தில், திட்டப்படி 50 சத விகிதம்தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. கூலிகள் சம்பள விகிதம் 150 முதல் 200 சத விகிதம் அதிகரித்திருக்கிறது. வண்டி சத்தம் மூன்று மடங்கு, எருதுகளின் விலை 300 சத விகிதம், சிமிட்டி குழாய்கள், இன்னும் இதர சாமான்களும் பன்மடங்கு விலை அதிகரித்திருக்கின்றன. சாமான்கள் கிடைப்பதே துர்லபமாக இருக்கிறது. சிமிட்டி கவர்மெண்டு நிர்ணயித்திருக்கும் விலைக்கு கிடைப்பதே அரிதாக இருக்கிறது. இந்த நிலைமையில் பஞ்சாயத்துகள் சாலைகள் போடுவது அசாத்தியமான காரியம். கவர்மெண்டு சகாயம் அவசியம் தேவை. நிர்ணயிக்கப்பட்டிருக்கும் திட்ட விலைகளை உயர்த்தவேண்டும். இன்னும் தாராளமாக கவர்மெண்டு பஞ்சாயத்துகளுக்கு உதவி செய்யவேண்டும். முன்போல் செலவில் கால்பாகமே பஞ்சாயத்துகள் கொடுக்கவேண்டும் என்று ஏற்படவேண்டும். 1920ம் வருஷத்து பஞ்சாயத்து சட்டப்படி முதலில் பஞ்சாயத்துகள் வேலை செய்ய துவக்கியபோது, பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்ததற்கு அடுத்தபடியாக அவைகள் சாதித்த பெரிய காரியம் நல்ல சாலைகள் போட்டதுதான். அப்போது ரிஜிஸ்த்ரார் ஜெனரல் பதவியை வகித்து வந்த அதிகாரிகள் இதற்காக தாராளமாக திரவிய சகாயம் செய்துவந்தார்கள். பஞ்சாயத்துகளும் அவ்வேலையை உற்சாகத்துடன் செய்து வந்தன. யுத்தத்திற்குப்பின் கிராம போக்கு வரத்து சாலைகளின் நிலைமை உண்மையிலேயே திருப்திகரமாக மாற வேண்டுமானால், கவர்மெண்டின் கொள்கை இப்போதிருந்தே மாற வேண்டும். இப்போதே ஆரம்பிக்கவேண்டும். மான்யம் கொடுப்பது, செலவு திட்டங்களை நிர்ணயிப்பது, இவைகளுடன் கூட, எஸ்டிமேட்டுகள் அனுப்பி அவைகளை அங்கீகரிக்கும் முறைகளிலும் சில மாறுதல்கள் செய்வது அவசியம். பஞ்சாயத்துகள் பல ஒன்றுகூடி, தாங்களே ஓவர்சியர், மற்ற சிப்பந்திகளை நியமித்துகொள்ள அதிகாரமும், எஸ்டிமேட்டுகள் தயார் செய்துக்கொள்ள அதிகாரமும் அவைகளுக்கு கொடுபடவேண்டும். இந்த சீர்திருத்தம் மிகவும் அவசரமானது. பழைய நிலைமையே நீடித்திருக்கும்படி கவர்மெண்டு வாளாவிருக்கக் கூடாது.

---

# கால்நடைகளின் அபிவிருத்தி.

---

### கனம் S. V. ராமமூர்த்தி அவர்களின் பிரசங்கம்.

சென்னை வெடர்னரி இலாகா இப்போது கால்நடைகளின் வளர்ப்பிலும், அபிவிருத்தியிலும் ஊக்கமாக கவனம் செலுத்திவருவது மிகவும் திருப்திகரமாக பயன் கொடுக்கும் வியாதிகளைத் தடுப்பதும், வியாதிகளை குணம் செய்வதும் மாத்திரம் இந்த இலாகா கவனம் செலுத்தி வந்த காலங்களில் இந்த இலாகாவின் நடவடிக்கைகள், விவசாய இலாகாவைப்போல் கவர்மெண்டின் கவனத்தையும் பொதுமக்களின் கவனத்தையும் கவரவில்லை என்பது ஆச்சரியப்படவேண்டிய விஷயமில்லை. விவசாய இலாகா புது புது முறை விவசாய சாதனங்களை கண்டு பிடித்தும், அதிக விளைவுக்கு வழிகாட்டியும், புஷ்டிசத்துகள் கொண்ட பயிர்கள் செய்யச் சொல்லியும் இன்னும் பலவிதத்தில் அரிய வேலை செய்திருக்கிறது. விவசாய இலாகாவின் அம்சமாக இதுவரையில் இருந்து வந்த கால்நடைகள் இலாகாவை அந்த இலாகாவிலிருந்து பிரித்து, வெடர்னரி இலாகாவினுடன் பிணைக்கப்பட்டபின்தான், இந்த அபிவிருத்தியை காண்பிக்கதக்க சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. பொருளாதார சாஸ்திர நிபுணர்கள் இந்தியாவின் விவசாய கால்நடை செல்வ நிலைமையை ஒப்பிட்டு பார்த்து தேசத்திற்கு விவசாயத்தைவிட கால்நடைகள் மூலம் தான் அதிக செல்வம் உற்பத்தியாகிறது என்பதை வெளியிட்டிருப்பது அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் மிக்க ஆச்சரியத்தைக்கொடுக்கும். ஏனெனில் நமக்கெல்லாம் விவசாயமே பிரதானமாக தென்பட்டுவந்தது. செல்வம் உற்பத்தி செய்வதில் தாவரங்களிலிருந்து கிடைப்பதைவிட அதிகம் கால் நடைகளிலிருந்தும், முறையே அவைகளைவிட மனிதனிடமிருந்தும் கிடைக்கும் என்பதை பலர் கவனத்தில் வைத்துக்கொள்ளுவதில்லை. இது விஷயமாக இன்னும் ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியம். சரீர, சக்தி கொண்டும், புத்தி, மானசிக சக்தி கொண்டும் உழைத்து செல்வத்தை தாவரங்களைவிட, கால்நடைகளும், அவைகளை விட மனிதன் அதிகமாக உற்பத்தி செய்கிறான் என்பது தெளிவாக தெரிகிறது. பொருளாதார சாஸ்திரிகளின் கணக்குப் படிக்கும் சரீர சக்தியினால் மாத்திரம் உற்பத்தி செய்யப்படும் செல்வமும் இந்த ரீதியில் தான் உண்டாகிறது என்று ஏற்படுகிறது.

ஆனால் கால் நடைகளைவிட தாவரங்கள் உற்பத்தி விஷயத்திலும், மனிதன் விஷயத்திலும் அதிக அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதானது சற்று ஆச்சரியத்தைதான் கொடுக்கும். அது எப்படி ஏற்பட்டிருக்கக் கூடும் என்றால் கால்நடைகளைவிட தாவரங்கள் கட்டுக்கடங்கி, அவைகளை உபயோகிக்குமுன் அவைகளை பழக்க அடக்கவேண்டிய அவசியமில்லை. ஒரு வேளை இது காரணம் பற்றி மனிதர்களுக்கு விவசாயத்தில் அதிக பற்றுதல் ஏற்பட்டிருக்கக்கூடும். ஆதி காலத்தில் மனிதன் உட்கொண்ட ஆகாரப்பயிர்களில் பாதியும், கால்நடைகளில் பாதியும் ஆசியாவின் தென்கிழக்கு பிரதேசங்களிலும், தென் சீனு தேசத்திலுமே இருந்து வந்தன, என்று ஒரு ரஷியா தேசத்து விஞ்ஞான சாஸ்திரி சொல்லியிருக்கிறார். தாவரங்களின் அபிவிருத்தியை விட கால்நடைகளின் அபிவிருத்தி நடக்கவில்லை

என்பது உண்மை. அவர்கள் பண்ணையில் வெகுகாலத்திற்கு முன்பிருந்து இருந்த வரும் கன் ஆடு, மாடு, பறவை இனங்களைத்தவிர வேறு கிடையாது. இவைகளை வெகுகாலத்திற்குமுன் முதல் முதல் பழக்கி, உபயோகத்திற்கு கொண்டு வந்த ஸ்திரீகளின் தீர்க்கதிருஷ்டி மிக்க மெச்சத்தக்கது. அதே மாதிரி தீர்க்க திருஷ்டியும், ஊக்கமும் இப்போதும் இருந்தால், நிச்சயமாக இத்துறையில் பல நன்மைதரக்கூடிய மாறுதல்கள் செய்வதற்கு இடமிருக்கிறது.

அவர்களை பொது மக்களும், கவர்மெண்டாரும் உற்சாகப்படுத்தி வாழ்த்துவார்கள். கால்நடை அபிவிருத்தி விஷயத்தில் ஒங்கோல் ஜாதி கங்காயம், சிந்தி போன்ற பல புது ஜாதிகள் தற்போது இருக்கின்றன. மேலும் இம்மாகாணத்தில் வளர்ந்த காளை மாடுகள் இருக்கின்றன. ஆடுகளிலும் பக்ஷிவகைகளிலும் பல நல்ல ஜாதிகள் இருக்கின்றன. வெடர்னரி இலாகாவைச் சேர்ந்தவர்கள் இவைகளையெல்லாம் அபிவிருத்தி செய்யவேண்டும். எல்லா இடங்களிலும்பரவும்படி செய்யவேண்டும். கவர்மெண்டார் தங்கள் காடுகள் அனைத்தையும் இந்த வேலைக்கு உபுயோகப்படும்படி உதவிசெய்ய சித்தமாக யிருக்கிறார்கள். தீனிக்கு வேண்டிய வசதிகளுக்கு, பாசனம் முதலிய சகாயத்தால் பயிர்செய்து கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். கால்நடைகளுக்கு நோய்கண்டால் உபயோகப்படும்படி தாராளமாக மருந்துகளை முன் கூட்டியே தயாராக வைத்திருக்கவேண்டும். நோய்கண்டபின் அவைகளை தயார்செய்ய ஆரம்பிப்பதால் தாமதம் ஏற்படும். எல்லா விஷயங்களைக்குறித்தும் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டால் அவை ஊக்கமாக கவனிக்கப்பட்டு, கூடுமானவரையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

---

# வர்த்தமானங்களும் குறிப்புகளும்.

---

**ஸ்தல ஸ்தாபனங்கள் வேலை செய்ய மறுக்கின்றனர்: கால நிலைமை சௌகர்யமாகயில்லை.—**

சூரத் முனிசிபாலிடி அடியில்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது:—

தற்கால அரசியல் நிலைமையை சீர்படுத்த மகாத்மா காந்தியையும் இதர பொதுஜன தலைவர்களையும் விடுதலை செய்து அவர்களுடன் கலந்து ஆலோசனை செய்ய யாதொரு நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படாததால் எந்த ஸ்தல ஸ்தாபனமும் தான் பொதுஜன நன்மைக்காக செய்யவேண்டிய வேலைகளை சுதந்திரத்துடன் செய்ய இயலாது என கருதி, இந்த முனிசிபாலிடி இதுமுதல் இதன் நிர்வாகம் நிறுத்தப்படும்.

இத்தீர்மானத்திற்கு சாதகமாக 39 அங்கத்தினர்களும், எதிராக 9 பேர்களும் ஓட்டு செய்தார்கள்.

ஆமதாபாத் முனிசிபாலிடியும் இதேபோல் ஒரு தீர்மானத்தை, மிக்க எதிர்ப்பின் பேரில், நிறைவேற்றியது.

குஜராத்தில் புதிதாக நடத்தப்பட்ட தேர்தல்களில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் அதிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் வேறு இதர ஸ்தாபனங்களிலும் இம்மாதிரி தீர்மானம் விவாதத்திற்கு வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

ஷை தீர்மானம் சமீபத்தில் நடந்த குஜராத் ஸ்தல ஸ்தாபன மத்திய போர்டின் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

**வருஷத்திற்கு 20 கன்றுகள்.—**

ரேமாண்டு உம்பார்க் என்பவர் தற்சமயம் ஆகாயப்படையில் சேர்ந்திருக்கிறார். இதற்குமுன் அவர் விஞ்ஞான விஷயமாக ஆராய்ச்சிகள் செய்து ஒரு நூதன முறையை கண்டு பிடித்திருக்கிறார். அதனால் கால்நடை வளர்ப்பு விஷயத்தில் பெருத்த மாறுதல் ஏற்படலாம்.

இந்த உம்பார்க் என்பவர் இந்தியானு என்ற பிரதேசத்திலுள்ள லபாயெட் கலாசாலையில் பட்டம் பெற்றவர். ஆனால் அவர் செய்த பல ஆராய்ச்சிகள் அவருடைய சொந்த ஆராய்ச்சி சாலையில் செய்யப்பட்டவை.

அவர் சொல்லும் முறையினால் நல்ல புஷ்டியுள்ள ஒரு பசு, ஒரு வருஷத்தில் ஒரு கன்றுக்குப்பதிலாக 10 முதல் 20 கன்றுகள் வரையில் போடும்.

ஒரு இடையனிடம் 1000 டாலர்கள் பொறுமான ஒரு பசு இருந்து 1000 எருதுடன் சேர்க்கைக்கு வசதியிருக்குமானால், இதனுடைய சேர்க்கையினால் வருஷத்தில் 10 முதல் 20 கன்றுகள் கிடைக்கும்படி செய்யலாம். அந்த புஷ்டியான பசுவினிடத்தில் உண்டாகும் முதிர்ந்த கருமுட்டைகளை மட்ட பசுக்களுக்கு மாற்றி அப்பசுக்கள் அந்த 1000 டாலர் எருதுடன் புணர்ச்சி செய்தால் இது சாத்தியமாகிறது.

பசுவுக்கு சேர்க்கை உணர்ச்சி அதிகமாக யிருக்கும் காலத்தில் அதனிடம் ஒரு முட்டை உண்டாகிறது. அதை எளிதில் அப்புறப்படுத்தி மற்றொரு பசுவிற்கு மாற்றலாம். மூன்று வாரத்தில் அதனிடம் மற்றொரு முட்டை உண்டாகிறது. இது மாதிரி அது எருதுடன் சேர்ந்து கர்ப்பமாகும் வரையில் மூன்று வாரத்திற்கொருதரம் ஒரு முட்டையை உற்பத்தி செய்யும். சில மருந்துகள் உபயோகித்து ஒரு பசுவை சாதாரண 17 முட்டைகளுக்கு பதில் ஒரு வருஷத்திற்கு 25 முதல் 30 முட்டைகள் வரையில் உற்பத்தியாகும்படி செய்யலாம் இவையெல்லாவற்றையும் வேறொரு பசுவிற்கு மாற்றலாம். ஒரு கன்றின் தேக அமைப்பு இந்த முட்டையையும், கருவையும் அனுசரித்திருக்குமே தவிர, அது தரிக்கப்படும் கர்பத்தை அனுசரித்திருக்காது. அதாவது புஷ்டியான பசுவின் முட்டைகள் மாற்றப்படும் பசுக்களின் மட்டமான ரத்தத்தினால் அவைகளின் வளர்ச்சி பாதிக்கப்படாது. இந்த மாதிரி முட்டைகள் மாற்றி தன்னுடைய எல்லா மட்டமான மாடுகளுக்கு பதிலாக ஒரு இடையன் உயர்ந்த ரக கால்நடைகளாக சில வருஷ காலத்தில் அடைய முடியும் முட்டைகளை மாற்றுவது சாத்தியம். எல்லா கால்நடைகளுக்கும் இம்முறை உபயோகப்படுத்தலாம்.

* * *

**கோவாபரேடிவ் ஸ்டோர்கள்.—**

31-1-44 தேதியில் இருந்த ப்ரைமரி ஸ்டோர்களின் எண்ணிக்கை 1144. அந்த மாதத்தில் அவைகள் 56·52 லக்ஷம் ரூபாய்க்கு வாங்கியிருக்கின்றன. விற்பனையின் தொகை 61·91 லக்ஷ ரூபாய். இதற்கு முன் மாதம் இவை முறையே 55·87 லக்ஷங்களாகவும், 64·28 லக்ஷ ரூபாய்களாகவும் இருந்தது. விற்பனையில் கொஞ்சம் குறைவு ஏற்பட்டிருக்கிறது. இதை விருத்தி செய்யதக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். வட ஆற்காடு, கிழக்கு, மேற்கு கோதாவரி ஜில்லாக்களில் உதவி அடைந்த ஜனத்தொகை கணக்கு திருப்திகரமற்றதாகவும், அநந்தபுரம், பெல்லாரி, கோயம்பத்தூர், கர்நூல், தென் கன்னடம், சென்னை மதுரை, நெல்லூர், நீலகிரி, ராமநாதபுரம், விசாகப்பட்டணம், இந்த ஜில்லாக்களில் 12 சத விகித ஜனத்தொகைக்குமேல் பயன் பெற்றிருக்கிறார்கள். இந்த நெருக்கடியான சமயத்தில் இந்த ஸ்டோர்களுக்கு பொது ஜனங்களுக்கு ஊழியம் செய்ய நல்ல சந்தர்பம் வாய்த்திருக்கிறது. அதை அவைகள் சரிவர பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

* * *

**திருப்பதி மலைக்கு சாலை.—**

மனதை கவரும் காக்ஷிகள் கொண்ட மார்க்கங்கள் வழியாக, ஏற்றமும் இறக்கமும் வளைவாகவும் இருக்கும் ஒரு சாலை 12 மைலுக்கு திருப்பதி மலையில் போடப்

பட்டிருக்கிறது. இனி 6 மைலுக்கு மேல் முட்டிக்கால் முறிய ஏற வேண்டிய கஷ்டம் இல்லை.

* * *

மாட்டு சாணியின் உபயோகம்.—

இந்தியாவில் தற்சமயம் 30 கோடி கால்நடைகள் இருப்பதாக கணக்கிடப் பட்டிருக்கிறது. தலைக்கு 10 பவுண்டு சாணி விழும் என்று கணக்கு பார்த்தால் 50 கோடி டன்கள் கிடைக்கும். ஒரு ஏகராவுக்கு $3\frac{1}{2}$ டன் என்ற கணக்கின் பேரில், இது நம் நிலங்களில் 60 சத விகிதத்திற்கு உபயோகப்படும். சாணியில் பாதிதான் எருவாக உபயோகப்படுத்துவதற்கு கிடைக்கும் என்று வைத்துக்கொண்டாலும், அப்படியும் 30 சத விகித நிலங்களின் விளைச்சலை இரட்டிக்க முடியும். தேசத்தின் ஆகார நிலைமைக்கு நன்மை தரும். காடுகளிலிருந்து வெறகு சரசமான விலைக்கு கொடுத்தால், சாணியை விவசாயத்திற்கு உபயோகப் படுத்த உதவும்.

* * *

300 குழாய் கிணறுகள் :—

எதிரியின் நடவடிக்கையால் ஏதாவது தண்ணீர்சப்ளைக்கு தடங்கல் ஏற்பட்டால் அதை சமாளிக்க டாக்க நகரத்தில் 300 குழாய் கிணறுகள் எடுக்கப் படுகின்றன. அவைகளில் அநேகமாக எல்லாம் பூர்த்தியாய்விட்டன.

* * *

ஹைதராபாத்தில் ஹைட்ரோ-எலக்ட்ரிக் திட்டம்:—

நிஜாம் சமஸ்தான கவர்மெண்டு 50 லக்ஷ ரூபாய் செலவில் ஒரு தண்ணீர்-மின்சார திட்டம் நைஜாம் சாகரில் அமுல் நடத்த தீர்மானித்திருக்கிறார்கள். துகை 5 வருஷத்தில் தவணையாக செலவிடப்படும். மின்சாரம் சரசமாக துணி உற்பத்தி சாலைகளுக்கும், விவசாய கருவி உற்பத்தி சாலைகளுக்கும், இதர தொழில் சாலைகளுக்கும், விநியோகப்படும். நைஜாம் சாகர் சமீபத்திலிருக்கும் பிரதேசங்களுக்கும் மின்சாரம் விநியோகிக்கப்படும்.

---

# சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் சங்கம்—1943-44 வருஷத்திய யாதாஸ்து.

---

மேற்படி சங்கத்தின் 1943-44ம் வருஷத்திய நடவடிக்கைகளின் விவரமும், 1944-45ம் வருஷத்திய பட்ஜெட்டும், ஆடிடர் குறிப்பும் சமர்ப்பிக்கிறோம்.

மகா யுத்தத்தின் ஆறாவது வருஷம் நடக்கிறது. அதை நடத்துவதில் கவர்மெண்டின் பூரண கவனமும் செலுத்தவேண்டி யிருக்கிறது. கிராம பஞ்சாயத்து பத்திரிகை பிரசுரிப்பதிலும், பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட விஷயங்களில் கவர்மெண்டுக்கு வேண்டுகோள்கள் செய்வதுமே சாதித்த காரியங்கள்.

அங்கத்தினர்கள் :—1-4-'44இல் அங்கத்தினர்களின் எண்ணிக்கை 1,202, எல்லா பஞ்சாயத்துகளுக்கும் அங்கத்தினர்களாக சேரும்படி விண்ணப்பம் விட்டும், சந்தா பாக்கியுள்ள பஞ்சாயத்துகளுக்கு பத்திரிகையை வி. பி. மூலமாய் அனுப்பியும், என்னாலான முயற்சிகள் செய்து வருகிறேன். பழைய அங்கத்தினர்கள் தங்கள்

உதவியை மேற்கொண்டு செய்து வருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். எக்சிகியூடிவ் கமிட்டி அங்கத்தினர்கள், நிர்வாக போர்டு அங்கத்தினர்கள் இவர்களுடைய ஒத்துழைப்பும், உதவியும் இருந்தால் சங்கம் வலுவடையும். எல்லா அங்கத்தினர்களும் இது விஷயமாக அதிக ஊக்கம் எடுத்துக்கொண்டு எல்லா பஞ்சாயத்துகளையும் அங்கத்தினர்களாகச் சேரும்படி தூண்டுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

வரவு செலவு :—அங்கத்தினர்கள் எண்ணிக்கை குறைந்துபோனபோதிலும், ஜாக்கிரதையாகவும், சிக்கனமாகவும நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வருவதால், முக்கிய பத்திரிகை பிரசுரிப்பதில், நாம் சமாளிக்க முடிகிறது. இச்சங்கத்தின் பொது காரியதரிசியே மாகாண கோவாபரேடிவ் சங்கத்தின் கௌரவ கூட்டு காரியதரிசியாக இருப்பதாலும், டெலிபோன் இரண்டு சங்கங்களின் காரியங்களுக்கும் பொதுவாக உபயோகப்பட்டு வருவதாலும், கோவாபரேடிவ் சங்கம் டெலிபோன் செலவில் பாதியை ஏற்றுக்கொள்ள சம்மதித்திருக்கிறது. மாகாண கோவாபரேடிவ் பாங்கி, தென் இந்திய கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொசைடி, அமிர்தாஞ்சனம் இவைகள் விளம்பரங்களை பத்திரிகைக்கு கொடுத்து வந்தன. இதன் மூலம் கிடைத்த வருமானம் 550 ரூபாய். ஆடிடரின் கையெழுத்து கொண்ட வரவு, செலவு விவரம் அடியில் பட்ஜெட் விவரத்துடன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்து பத்திரிகை :—காகித விலை அதிகமாயிருந்தும், அங்கத்தினர்களின் எண்ணிக்கை குறைவுபட்டிருந்தும் நாம் விடாமல் இப்பத்திரிகையை பிரசுரித்து வருவதைப்பற்றி சந்தோஷமடைகிறோம். இவ்வருஷம் 10 இதழ்களே பிரசுரித்து கொஞ்சம் சிக்கனம் செய்யவேண்டி யிருந்தது.

நம் மாகாண கவர்மெண்டின் சிபார்சின்பேரில் மத்திய கவர்மெண்டார் நமக்கு காகிதத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இதனால் காகிதம் வாங்கும் அதிக செலவு மிச்சம் ஏற்படும்.

நடவடிக்கைகள் :—வழக்கம்போல் நாம் பல விஷயங்களைக் குறித்து கவர்மெண்டாருக்கு சிபார்சு செய்திருக்கிறோம். எங்கள் கவனத்திற்கு வரும் எல்லா குறைகளையும் நாம் கவர்மெண்டாருக்கு தெரியப்படுத்த தவறியதில்லை. பஞ்சாயத்துகளில் பல தேவைகளைப்பற்றியும் நாம் கவர்மெண்டாருக்கு தெரிவிக்கிறோம்.

பிரசாரம் :—பஞ்சாயத்துகள் சுறுசுறுப்பாக யில்லை என்பதைப்பற்றி சந்தேகமில்லை. முன்பு பஞ்சாயத்துகளின் மகாநாடுகள் அடிக்கடி கூடி, தங்கள் தேவைகளைக் குறித்து விவாதித்து, அதிக ஊக்கமும் உற்சாகமும் தென்பட்டது. வரும் வருஷத்தில் ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டரின் அனுமதி பெற்று ஜில்லா மகாநாடுகள் மறுபடியும் கூடி, பல விஷயங்களைக் குறித்து விவாதிக்க சாத்தியப்படும் என்று நம்புகிறோம். யுத்தத்திற்குப்பின் ஏற்படும் புனரமைப்பு திட்டத்தில் பஞ்சாயத்துகள் செய்யவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. பஞ்சாயத்துகள் சம்பந்தப்பட்ட இலாகாவை கவனிக்கும், கவர்னரின் ஆலோசனையாளரான ஆஸ்டின் துரையவர்கள் சமீபத்தில் செய்த பிரசங்கத்தில் கிராமங்களின் நிலைமையை சீர்படுத்த திட்டங்களை விவரித்திருக்கிறார். அவைகளின் பஞ்சாயத்துகளின் சகாயத்தை அவர் பயன்படுத்திக் கொள்ளுவார் என்று நம்புகிறோம்.

வந்தனம் :—ஆஸ்டின் துரைக்கும், ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டருக்கும், அவர்கள் நமக்கு காட்டி வரும் அனுதாபத்திற்காக வந்தனம் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நமக்கு விளம்பரம் அனுப்பி திரவிய சகாயம் செய்த மாகாண கோவாபரேடிவ் பாங்கி, தென் இந்திய கோவாபரேடிவ் இன்ஸ்யூரன்ஸ் சொஸைடி, மாகாண கோவாபரேடிவ் சங்கம், அமிர்தாஞ்சனம், இவைகளுக்கு [illegible] வந்தனம் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

# மாகாண பஞ்சாயத்து போர்டுகள் சங்கம்.

## 31-3-1944இல் முடிவடைந்த வருஷாந்திர வரவு செலவு கணக்கு.

| செலவு. | ரூ. | அ. | பை. | வரவு. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| ஊழியம ... | 300 | 0 | 0 | சந்தா (தபால் செலவு உள்பட) ... | 2,970 | 6 | 0 |
| காகிதம், அச்சுகூலி ... | 1,278 | 8 | 3 | 1-4-1943இல் வரவேண்டிய பாக்கி ... | *1,301 | 0 | 0 |
| சிப்பந்திகள் ... | 522 | 0 | 0 | | | | |
| தபால் ... | 650 | 9 | 0 | | 1,669 | 6 | 0 |
| அங்கத்தினர்கள் பிரயாணப்படி ... | 69 | 4 | 0 | 31-3-1944இல் வரவேண்டிய பாக்கி ... | 200 | 0 | 0 |
| வரி, வாடகை ... | 340 | 0 | 0 | | | | |
| காகிதம் வகையறா ... | 117 | 2 | 0 | மொத்தம் ... | 1,869 | 6 | 0 |
| இதர செலவுகள் ... | 27 | 3 | 3 | 1-4-1943இல் அட்வான்ஸ் சந்தா தொகை ... | 6 | 0 | 0 |
| டெலிபோன் ... | 222 | 15 | 10 | | | | |
| பத்திரிகைகளுக்கு சந்தா ... | 6 | 0 | 0 | மொத்தம் ... | 1,875 | 6 | 0 |
| பாங்கிசெலவு ... | 4 | 7 | 6 | விளம்பர வருமானம் ... | 470 | 0 | 0 |
| 1943-44 ஆடிட்டர் பீஸ் ... | 25 | 0 | 0 | டிவிடெண்டு வரவு ... | 41 | 2 | 3 |
| வசூல் செய்ய முடியாது என கருதப்படும் | | | | பாங்கியிலிருந்து கிடைத்த வட்டி ... | 27 | 1 | 0 |
| விளம்பர வருமானம் ... | 21 | 8 | 0 | டெலிபோன் வருமானம் ... | 110 | 6 | 9 |
| மர சாமான்கள் தேய்வு ... | 28 | 0 | 0 | ரத்து செய்யப்பட்ட ஸஸ்பென்ஸ் பாக்கி ... | 8 | 6 | 0 |
| | | | | இதர வரவு (காகிதம்) ... | 68 | 2 | 0 |
| | | | | வரவைவிட இவ்வருஷத்திய அதிகப்படியான செலவு ... | 1,012 | 1 | 10 |
| மொத்தம் ... | 3,612 | 9 | 10 | மொத்தம் ... | 3,612 | 9 | 10 |

பரிசீலனை செய்யப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(கையொப்பம்) V. சௌந்தரராஜன், B.A., G.D.A., R.A.,
ஆடிட்டர்.

*ரூ. 1,301 இன்னும் வசூலிக்கப்படவில்லை.

## மாகாண பஞ்சாயத்து போர்டுகள் சங்கம்.
### 1944-45 வருஷ பட்ஜெட்டு.

| வரவு. | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| சந்தா தொகை | ... | 3,300 | 0 | 0 |
| விளம்பரம் | ... | 400 | 0 | 0 |
| வட்டி வரவு | ... | 50 | 0 | 0 |
| சந்தா பாக்கி | ... | 200 | 0 | 0 |
| வி. பி. தபால் | ... | 200 | 0 | 0 |
| ஜில்லா மகாநாடுகள் | ... | 100 | 0 | 0 |
| மொத்தம் | ... | 4,250 | 0 | 0 |

| செலவு. | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| ஊதியம் | ... | 500 | 0 | 0 |
| அச்சு காகிதம் | ... | 500 | 0 | 0 |
| அச்சு கூலி | ... | 500 | 0 | 0 |
| பத்திரிகை அனுப்ப தபால் செலவு | ... | 350 | 0 | 0 |
| ஷை வி. பி. செலவு | ... | 300 | 0 | 0 |
| ஷை பொது செலவு | ... | 85 | 0 | 0 |
| சிப்பந்திகள் | ... | 450 | 0 | 0 |
| வாடகை, வரி | ... | 360 | 0 | 0 |
| டெலிபோன் | ... | 180 | 0 | 0 |
| காகிதம் முதலிய இனங்கள் | ... | 100 | 0 | 0 |
| இதர செலவுகள் | ... | 100 | 0 | 0 |
| ஆடிடர் ஊதியம் | ... | 25 | 0 | 0 |
| மீடிங்குகளுக்கு பிரயாணம் | ... | 300 | 0 | 0 |
| ஜில்லா மகாநாடுகள் | ... | 500 | 0 | 0 |
| மொத்தம் | ... | 4,250 | 0 | 0 |

## மாகாண பஞ்சாயத்து போர்டுகள் சங்கம்

### 1944ஆ மார்ச்சுமீ 31உல் முடிவடைந்த வருஷாந்திர வரவு சிலவு கணக்கு.

| வருமானம். | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| முந்திய வருஷத்திய வரவு சிலவு கணக்குப்படி, கான்பரன்ஸ் மிகுதி வரவு ... | | | | 3,767 | 11 | 4 |
| சில்லரை கொடுக்கவேண்டிய துகைகள்: | | | | | | |
| டெலிபோன் சார்ஜ்கள் ... | 18 | 3 | 0 | | | |
| 1942-43ஆ ஆடிட்பீஸ் பாக்கி ... | 15 | 0 | 0 | | | |
| 1943-44 ஆ ஆடிட்பீஸ். ... | 25 | 0 | 0 | | | |
| | | | | 58 | 3 | 0 |
| | | | | 3,825 | 14 | 4 |

| செலவு. | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| ஆபீஸ் சாமான்கள். | | | | | | |
| முந்திய வருஷத்திய வரவு சிலவு கணக்குபடி ... | 288 | 0 | 0 | | | |
| வருஷத்திய டிபிரிஷியேஷன் ... | 28 | 0 | 0 | | | |
| | | | | 260 | 0 | 0 |
| வரவேண்டிய சந்தா ... | | | | 200 | 0 | 0 |
| டெலிபோன் சார்ஜ் வரவேண்டியது | | | | 9 | 1 | 6 |
| C. C. பிரின்டிங் ஓர்க்ஸ் ஷேர் ... | | | | 1 | 0 | 0 |
| அட்வான்ஸ் ஆனரேரியம் ... | | | | 25 | 0 | 0 |
| ரொக்கமும் இதர பாக்கிகளும்: | | | | | | |
| ரொக்க இருப்பு ... | 3 | 0 | 8 | | | |
| திருவல்லிக்கேணி பிராஞ்சு மதராஸ் மாகாண பிரவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்கில் கர்ரண்ட் அக்கவுண்டில் ... | 744 | 2 | 10 | | | |
| ஷை பாங்கு எட் ஆபீஸ் "கர்ரண்ட் அக்கவுண்டில்" ... | 31 | 14 | 6 | | | |
| திருவல்லிக்கேணி பிராஞ்சு M.P.C பாங்கு P.D. அக்கவுண்டில் ... | 1,837 | 10 | 0 | | | |
| | | | | 2,616 | 12 | 0 |
| வரவு சிலவு கணக்கு: | | | | | | |
| 31-3-44ல் முடியும் வருஷத்திய வரவுக்கு மேல் சிலவு ... | 1,012 | 1 | 10 | | | |
| 1-4-43ல் இருப்பு குறைவு ... | 298 | 1 | 0 | 714 | 0 | 10 |
| | | | | 3,825 | 14 | 4 |

சோதித்து பார்த்து சரியாக இருக்கிறது.
ரூ. 1,301 இன்னும் வசூலிக்கப்படவில்லை.

(கையொப்பம்) V. சௌந்தரராஜன், B.A., G.D.A., R.A.
ரிஜிஸ்ஜர்ட் அக்கவுண்டன்ட் ஆடிடர்.

# மதருஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

---

தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடெண்டு :

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதருஸ் கார்பரேஷனுக்கும், மதருஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காராக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

ஸெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

---

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வியன்னா, பி.ஏ., பி.எல்., 187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதருஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைத்திருக்கும் சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில் மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது

# சௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் சொஸைடி, லிமிடெட் மதராஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடேன்ட்

---

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகளிப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த சொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | **1,30,00,000.** |
| க்ஷேமநிதி | — | **10,00,000.** |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

**பி. வெங்கடாசலம்,** எம். ஏ., பி. எல்.,

காரியதரிசி.